317

ஏ164

2660

உ

முருகன் துணை.

திருச்செந்தூர் பதிகம்.

பழனிவேலவர் கதிர்காமவேலவர்பேரில்

ஆசிரிய விருத்தம்.

இஃது

திருவையார் மேலவட்டம்

புத்தக வியாபாரம்

M. அருணாஜலம் பிள்ளை அவர்களால்

இயற்றப்பெற்று

தஞ்சை வடக்கு மேல அலங்கம்

S. நாகமுத்துப்பிள்ளை அவர்கள்

வேண்டுகோளுக்கிணங்கி

சென்னை திருவொற்றியூர்

கலைமகள் விலாசம் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

All Rights Reserved.

இதன் விலை] 1936 [அணா 2.

13 JUL 1936

894·811

உ

கணபதி துணை.

கணபதி வணக்கம்.

காட்டுவழிபோனாலும் கள்ளர்பயமானாலும்
கேட்டுவழிகாலகணர் கிட்டிலும் நாட்டமுடன்
நம்பிக்கையாக நமக்கு விநாயகரே
தும்பிக்கையுண்டு துணை.

செந்தில்வளர் விநாயகரே சிவனே யுந்தன்
சீர்பாதம் போற்றிசெய்து சிறப்பாய்பாட
வந்து தமிழ் வாக்கருளும் வாலைத்தாயே
மலரடியை நானடியேன் வருந்தி நித்தம்
தந்திரமாய் சடாக்ஷரத்தை தியானம்செய்ய
சரஸ்வதியும் சாமுண்டி வீரவாகு
செந்திவளர் விநாயகரே முருகா அய்யா
சீர்பாதமென்னாளும சரணங்காப்பே 1

சீர்புகழும் யானைமுகன் செழித்து வாழ்க
சிறப்புடனே திருமாலும் மங்கைவாழ்க
வார்குழலாள் தெய்வானை வள்ளி வாழ்க
மணம்புனர்ந்த ஆறுமுகம் வடிவேல் வாழ்க

தார்புகழும் மேலமலை முருகர் வாழ்க
தமிழ் சொன்ன பிள்ளைகளும் தழைத்து வாழ்க
பார்புகழும் அன்னமொரு கோடிகளாகும
பாறமலையாண்டவரே பழனிவேலு 2

திருச்செந்தூர் பதிகம்.

(செந்திமலை.)

சீதிசற்றி கீழ்புரத்தில் யானும் வந்தேன்
விஸ்தார கொடிமரத்தலங்காரங் கண்டேன்
ஆதியெனும் மூலவிக்கினத்தழகைக் கண்டேன்
அடியேனும் திருச்செந்தூர் வலமாய் வந்தேன்
கீர்த்திபுகழ் பெரியோர்கள் தன்னைக் கண்டேன்
நிக்ஷயமாய் உன்னடியைக் காணவேண்டி
ஆதியெனும் கடற்கரையில் வந்து நின்று
ஆறுமுக தெரிசனங் கண்டருள் பெற்றேனே
நாழிதனை கிணறுதனை யானும் கண்டேன்
நழினமுடன் தீர்த்தமதிலாட கண்டேன்
வாழிசொல்லும் பெரியோர்கள் தன்னை கண்டேன்
வள்ளியுட கணவனை நான் காணவேண்டி
வேறுவினை யணுகாமலிருக்கக் கண்டேன்
வேலருட தன்பாதம் காணவேண்டி
ஆதியெனுங் கடற்கரையில் வந்து நின்று
ஆறுமுக தெரிசனங்கண்டருள் பெற்றேனே

மாசி மாதத்தில் தேர்வரவும் கண்டேன் [டேன்
மனிதரெல்லாம் மடத்திலன்னம் விழுங்கக்கண்
தேசிகனார் தேர்மீதிலமரக் கண்டேன் [டேன்
தினம் தினமும் பூச்சரங்கள் சிறப்பாய்க் கண்
வாசியெனும் பெரியோர்கள் தன்னைக்கண்டேன்
வள்ளியுட கணவனை நான் காணவேண்டி
ஆதியெனும் கடற்கரையில் வந்துநின்று
ஆறுறுவ தெரிசனங் கண்டருள் பெற்றேனே

மூன்று சுற்று மண்டபமும் சுற்றிப் பார்த்தேன்
முன்னாலே இடும்பனவர் தன்னைக் கண்டேன்
நானுமே மலைக்குடவில் பெருமானைக் கண்டேன்
நல்ல வள்ளி சந்நிதியை திறக்கக் கண்டேன்
தேனும்பால் அபிஷேகம் செய்யக்கண்டேன்
சிவனார் தம் பாலகனை கண்ணாற் கண்டேன்
ஆதியெனும் கடற்கரையில் வந்துநின்று
ஆறுறுவ தெரிசனங் கண்டருள் பெற்றேனே

ஆறுமுக நாயகனார் பாதங்கண்டேன்
அவர்க்கெதிரே சண்முக விலாசங்கண்டேன்
கூறுமடியேன் துயரம் தீர்க்கக் கண்டேன்
குமரருட திருவருள் தன்னைக் கண்டேன்
கானமயில் எத்தனையோ யானும் கண்டேன
கதிர்வேலன் சேவல் கொடியானும் கண்டேன்

ஆதியெனும் கடற்கரையில் வந்து நின்று
ஆறுருவ தெரிசனங் கண்டருள் பெற்றேனே

அமணர்குலம் வேறறுத்த கையுமெங்கே
ஆறுமுகம் பன்னிருகை வேலுமெங்கே
தருணத்திலோடிவரும் இடும்பனெங்கே
உன் சந்நதியில் இருக்கின்ற கடம்பனெங்கே
வேகமாய் ஓடிவரும் மயிலுமெங்கே
வேதாந்த சங்குமணி நாதமெங்கே
வள்ளிதெய்வானையுடன் மயிலுமேறி
வரவேணும் திருச்செந்தூர் வேலுபோற்றி 8

வண்டாடும் மலர்சோலை உன்னுதானல்
வள்ளியம்மை யெனையீன்ற தாயுமானுள்
தெண்டாயுதம் உனது கையில் வேலுமானல்
தெய்வானை யெனையீன்ற தாயுமானுள்
கொண்டாடும் மாதுகுறவள்ளி தன்னை
கோலமணம் சூட்டி வைத்த குழந்தையாண்டி
பண்டாறம் நீறுமானல் என்னைக் காரும்
பச்சைமயில் வாகனரே பாதம் போற்றி 9

ஸ்ரீ பஞ்சநதீஸ்வரஸ்வாமி துணை.

கனதனவான்களுக்கு ஓர் வேண்டுகோள்

திருவையார் மேலவட்டம் M. அருணஜலம் பிள்ளை

அவர்களால் இயற்றிய வேதாந்த ஐகோர்ட்டு மனு.

சகல புவனங்களுக்கும் நியாயாதிபதியாகிய ஏக அகண்ட பரிபூரண சச்சிதானந்த தருமதுரையவர்கள் சமூகத்திற்கு

காயாபுரி என்னும் கஸ்பா, சிரமண்டலம்தாலூ கருவூரிலிருக்கும் பரமநாதன் குமாரன் ஆத்மநா ஜாதி—சக்கிலம், மதம்—சத்தி மதப், என்றைக்கு ஒரே வயதுள்ளவனுகிய யான் எழுதிக்கொடுத்தவாக்கு மூலப் பிராது என்னவென்றுல் என் அறிவானந்தபுரத் திலிருக்கும் சுயம்பிரகாச கணவாயோரத்தில், ஞான செய் நிலம் ஒன்று அது எனது பார்வைத்தாழ்வாய் அஞ்ஞானக்கோரை பண்டி தறிசுவாய்க் கிடப்பதைப் பற்றி என்புத்தி விவேகத்தில் முத்தி விவசாயம் செய்ய முயற்சி செய்ததன்பேரில் ஷை யூரைச் சேர்ந்த கோச மாபுரத்திலிருக்கும் காம நாடக்கன் 1 அதே பட்டி இச் சையா பிள்ளை 2 கவலைப்பட்டி சந்தேக முதலியார் 3 ஆங்காரகுணம் சேர்வைக்காரர் 4 நாவல்பட்டி அறு சுவை முதலியார் 5 கண்ணனூர் பார்வை முதலியார் 6 செவியாத்தூர் கேள்வி முதலியார் 7 சுவாச்சேரிமங்

கலம் கந்தப்பையர் 8 இந்த துர்குணத்தால் எல்லோ
ரும் ஒன்றுசேர்ந்துக்கொண்டு என் விவேக ஏரையும்
பூட்டவொட்டாமல் புத்திக் கலப்பையையும் ஒடித்து
சித்தமேழியையும் பிளந்து, என்னையும் இன்னான் இனி
யானென்று தோன்றவொட்டாமல் அவிவிவேகத் தடி
யால் அடித்ததற்கு சாக்ஷி—சதுர்வேத கல்விராயம்
பிள்ளை 1 சாத்தவத்தூர் பிரம்மமூர்த்தி 2 உச்சிவெடி
த்தான்பட்டி சோமசுந்தரம் பிள்ளை 3 இந்த சர்குண
ர்களுடைய வாக்குமூலத்தையும் எதிரி எட்டுபேர்
ளுடைய வாக்குமூலத்தையும் ஏக அகண்ட பரிபூரண
சிதானந்த தரும ஸ்வரூபமாய் விளங்கும் ஸ்ரீ பஞ்ச
ஸ்வரஸ்வாமி அவர்கள் விசாரணை செய்து சுயம்பிர
காசகணவாய் அதனருகிலுள்ள ஞான செய்யிலமும்
அடியேனுக்குக் கிடைக்கும்படியாய் மனுமூலமாய்த்
தாழ்ந்த வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்

திருச்சிற்றம்பலத்துடையானின் சிஷ்ய பரம்பரை

மா. அருணாஜலம் பிள்ளை.

புத்தக வியாபாரம் மேலவட்டம்,

திருவையார்.

ஸ்ரீ பஞ்சநதீஸ்வரஸ்வாமிபேரில் கீர்த்தனை.

பல்லவி.

கூடவருவாரொருவரில்லை—மனமே
கூடவருவாரொருவரில்லை கூடவ

அனுபல்லவி.

நாம் தேடிவைத்த பெண்டு பிள்ளை
செல்வமிருந்துன் பின் செல்லார் கூடவ

கொண்ட பெண்டீர் வீதிவழிமட்டும்—நாம்
கொஞ்சிமுத்தமிட்டனைக்கும் மைந்தர் மயானமட்டும்
உண்ட உறவு உந்தன் வீதிவழிமட்டுபோனால்
உள்ள பாவபுண்ணியம் ரெண்டும் உன்னுடன்
தொடர்ந்து ஓட்டும் கூடவ

பட்டுவஸ்திரம் கட்டில் மெத்தை போச்சு—நாம்
பாடுபட்டு கட்டிவைத்த வீட்டை விடலாச்சு
கொட்டில் மாடு பெட்டி தனம் போச்சு—உன்னைக்
கோமணம் பறித்தாண்டியாய்க் கொண்டுபோக
லாச்சு கூடவ

வண்டி மாடுபோல உழைத்தாயே—உந்தன்
வல்லமையெல்லாங் குலைந்து மங்கி இளைத்தாயே
உண்டி சேர்த்துவைத்துக் கொடுத்தாயே—சற்றும்
ஊணிப்பார்க்க காலில்லாமல் வீணுக்குழைத்தாயே
[கூடவ

காணிக்காணி என்றதும் பொய்யாச்சு—சல்லி
காசும் செலவிடாமல் சேர்த்ததும் வீணாச்சு
ஆணுவமுனக்கிருக்கலாச்சு—உமது
ஐயாரப்பன் தாழடியை மறந்து வெண்டியாச்சு
[கூடவ

உ

ஸ்ரீ பாலதெண்டாயுதபாணி துணை.

பழனி வேலவர் பேரில்

ஆசிரிய விருத்தம்.

மண்டலந்தன்னிலே மானிடஜென்மமாய்
மனிதனாய் உருவமாகி
மாறுத செல்வமும் பெருதகல்வியும்
மந்திரமெல்லாம் கற்று

மாலைதனில் மயானத்தில் மன்னரைப்போல் நின்று
மாரியே வேடம் பூண்டு
மங்கையும் நீறுமாய் வண்மையுடன் வைரவர்
இருபேரும் நின்று காத்து
கணபதியை முன்வைத்து காத்த கந்தனே வேளையில்
காளியும் வந்துமக்கு
கடகடன அதம்செய்ய கதரியே வேலெடுத்து
கடத்தை தானறுக்க
கருவியில்லாமலே கடுபொடிகள் செய்துமே
கயிலாசம் சேர்த்தமுருகா
பளபளன மயிலேறி வள்ளிதெய்வானையுடன்
வருகுவாய் பழனிமலை வேல்முருகனே 10

பக்தியுடனுலகத்தில் வினையரும் அரசரும்
பசியரும வசியராட
பதினெட்டு மலையாளம் வொன்பது கம்பளம்
பகவதி தேவியாட
வெற்றியுடன் மதனாட ரதியாட வாகுள்ள
வீரபத்திரனும் னின்றாடவே
வேலுமயிலவனாட வல்லிடும்பையனும்
விருது கட்டியம் படிக்க
சத்தி மகமாயி காட்டேரி இருளனும்
இன்னும் தரும தேவதைகளாட

சங்கிலி கருப்பனும் மதுராவீரய்யனும்
தானுமொரு பாரிலாட
மத்தளம் தாளமும் வெற்றி முரைசீரவே
வடிவேலெடுத்து நின்ற
பளபளென மயிலேரி வள்ளி தெய்வானையுடன்
வருகுவாய் பழனிமலை வேல் முருகனே 11

மாதா வயற்றிலே மாயமாய் தரித்துனான்
மறுவியிருந்தேன் சிலநாள்
மண்ணில் விழுந்தபின் மாதா யெடுத்துமே
மருவி வளத்தாள் சிலநாள்
ஐந்து வயதிலே அருமையாய் யெங்களை
பள்ளியில் வைத்தார் சிலநாள்
அண்டத்தை ரெண்டு துண்டாகவே அருத்திடும்
ஆறுமுகனிருப்பதாக
அருவதெனக்கு நேருவதாகவே
ஆருமே சொல்லவில்லை
சொற்பனந்தன்னிலே சொயரூபமாய் வந்த
சோமசுந்திரக் கடவுளே
பாலன் வருந்துகிறேன் ஓலமிட்டழுகிறேன்
பதரியே வேலெடுத்து
பளபளன மயிலேறி வள்ளிதெய்வானையுடன்
வருகுவாய் பழனிமலை வேல்முருகனே 12

பஞ்சாயகோடி பூமண்டலம் தனிலுள்ள
பதிகளும் நதிகள் தோறும்
பாரிலுலகில் தெய்வஸ்தலங்களும் நான் காணேன்
பாதமதி உளை ந பினேன்
செஞ்சரி வயல் சூழும் பழனியப்பாவென்று
சிந்தையில் நினைந்தபோது
சேவல் பிதாக்களும் வேலாயுதத்துடன்
தக்ஷிணையில் பக்கம்வந்து
அஞ்சாதே யென்றொரு வார்த்தைகள் சொல்லியே
அருள் தரும் கந்தஸ்வாமி
ஆறுமுகவா கார்த்திகேயா சேவகர்
சேனாதிபதியும் நீயே
மயிலாடும் மலர்சோலை தென் பழனி வாசனே
வள்ளிதெய்வானையுடனே
வாலவயதாயுனது வாகு மயிலேறி நட
மாடி வரும் முருகேசனே 18
தந்திரமதாகவே மந்திரம் செய்தது
ஓம் சரஹணபவா மந்திரம்
சண்முகனொரு மந்திரம் முருகனொரு மந்திரம்
சுவாமிநாதனொரு மந்திரம்
கந்தனொரு மந்திரம குமரனொரு மந்திரம்
கார்திகேய னொரு மந்திரம்
கானவர் புனத்திலே மான்மகிழ் குறத்தியை
கைவசம் செய்த மந்திரம

சுந்தரி துரந்தரி ஆறுமுக மந்திரம்
சுத்த முத்தையனொரு மந்திரம்
சூரரொடு மார்படை வேல்விடும் மந்திரம்
சிவசுப்பிரமண்ய மந்திரம்
வந்தமரர் நிற்கிறார் இந்த மந்திரம் சொன்னால்
வந்து காத்தது போலவே
வாலவயதாயுனது வாளுமயிலேரி நட
மாடி வருமுருகேசனே.

உ

கணபதி துணை.

கதிர்காம வேலர் செந்திமாலை.

கடலென்ற சமுத்திரம் நான் கப்பலேரி
கண்டியென்ற நகர்தனிலே யானும் சென்றேன்
கதிர்காமம் போகும் வழியானும் கண்டேன்
காத்திருந்த பெரியோர்கள் தன்னைக் கண்டேன்
காடி புலி யானைகளும் யானும் கண்டேன்
கந்தனுட தன்பாதம் யானும் கண்டேன்
கானமயில் எத்தனையோ யானும் கண்டேன்
கதிர்வேலன் தன்பாதம் யானும் கண்டேன்

கதிர்காமம் சுற்றிவந்து வலமாய் நின்றேன்
கலகலென்று சத்தம் ஒன்று யானும் கண்டேன்
கதவரிகில் சகடை வந்து நிற்கக்கண்டேன்
கற்பூர தீபங்கள் விளங்கக் கண்டேன்
கூறுமடியேன் துயரம் தீர்க்கக் கண்டேன்
குமாருட தெரிசனமும் யானும் கண்டேன்
ஆதியெனும் கதிர்காமம் சுற்றிவந்து
ஆறுமுக தெரிசனங் கண்டருள் பெற்றேனே.

உ

முருகன் துணை.

கதிர்காம ஆசிரிய விருத்தம்.

அடிபடுது அடிபடுது மேளதாளங்களும்
ஆறுமுகன் வருகிறானென்றே
இடிபடுது இடிபடுது மத்தளம் பேரிகை
எமலோகம் கிடுகிடுங்க
மயில் வருது மயில் வருது மன்னருட வாகனம்
மண்டலம் கிடுகிடுங்க

வேல்வருது வேல்வருது வீரகண்டாமணி
விண்ணுலகம் நடுநடுங்க
அதிர்வேட்டு பீரங்கி அதரியே விழுது
அமர் லோகம் கிடுகிடுங்க
சிருதாரை சங்கு ரதம் சத்தமும் பொழியிது
சிவலோகம் நடுநடுங்க
பிசாசுகள் பிணிகளும் போரேனென்றோடுது
பீரங்கி சப்தம் கேட்டு
வதாளம் பேதாளம் பூதமும் ஓடுது
வேட்டுனுட வோசை கேட்டு
சங்கு நாதங்களும் எங்கையோ கேட்கிறது
சண்முகம் வருவதாக
காலினில் வெண்டயம் கலகலன தண்டயம்
கனகமணி சப்தத்தோடு
காவியுடை தரித்து கவசகுண்டல மணிந்து
கானமயிலேறி கந்தன்
கடம்பனொரு காவடி இடும்பனொரு காவடி
காணாத லெக்ஷங்கோடி
கண்டவர்கள் பாடவும் கைகட்டியாடவும்
கந்தவேல் நின்றாடவும்
கடம்பா வனத்தை அதம் செய்த அய்யனே
கதிர்வேலெடுத்து நீருஞ்

கதருகிறேன் பதருகிறேன் ஓலமிட்டழுகிறேன்
கந்தனே கண் திறந்து

கடகடென மயிலேறி வள்ளி தெய்வானையுடன்
வருகுவாய் கதிர்காமவேல் முருகனே

ஈசன் மகிழ் பொதிகை முனிக்குருவுமாகி
ஈராறு கைதனிலே வேலுமேந்தி

பாசமுடன் மயிலேறி அசுரரை வென்று
பண்பான அமரருட துயரந் தீர்த்து

தேசிகனார் கதிர்காம வேலர் மீதில்
தீர்க்கமுள்ள பதினாறு கவிதான் சொல்ல

மாசில்லாப் பரஞ்சோதி ஒற்றைக்கொம்பன்
மலரடியை யனுதினமும் வணங்கினோமே.

முற்றிற்று.

தலைமகன் விலாசம் பிரஸ், திருவொற்றியூர் சென்னை. 1936

விளம்பரம்.

பழனிவேலவர், திருச்செந்தூர்வேலவர், கதிர்காமவேலவர் பேரில் ஆசிரிய விருத்தம் விலை அணா 2.

தஞ்சை வடசுவாயல் ஸ்ரீபாலதண்டாயுதபாணிக் கடவுள் பேரில் ஆசிரிய விருத்தம் விலை அணா 2.

மதுரை சொக்கநாதர் பிட்டுக்கு மண் சுமந்த நொண்டிச் சிந்து விலை அணா 2.

வேதாந்த நலுங்கு புஸ்தகம் அணா 2.

தஞ்சை V. S. பாப்புதாசர் இயற்றிய எரியாதகக்ஷி கேள்வி சிங்கார லாவணி விலை அணா 6.

திருச்சி துரைசாமி நாவலர் எரிந்த கக்ஷி சிங்கார லாவணி விலை அணா 6.

திருவையார் ஸ்தல புராணவசனம் விலை அணா 8.

மேலவட்டம் ஸ்ரீபாலதண்டாயுதபாணிக் கடவுள்பேரில் பஞ்சரத்தின மாலையும் கும்மியும் விலை அணா 2.

ஸ்ரீமத் ஷண்முக தயாநிதிமாலை விலை அணா 2.

ஸ்ரீ ராமாயணக்கும்மி விலை அணா 1.

இன்னும் பலவிதமான புஸ்தகங்களும் கிடைக்கும். ஷை யாரிடத்தில் சமயல்காரர்களும் கிடைப்பார்கள்.

எமது விலாசம்,

M. அருணஜலம் பிள்ளை,

புத்தக வியாபாரம்

மேலவட்டம், திருவையார்.